1981 பிப்ரவரி 7]

திருச்சிராப்பள்ளியில் பதுக்கிவைக்கப்பட்ட சர்க்கரை :

*வினா எண் 223—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியில், திருச்சி—தஞ்சை ரோட்டில் உள்ள கடையில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த சுமார் 1½ இலட்சம் ரூபாய் பெருமான சர்க்கரை அண்மையில் உணவுப் பிரிவு போலீசாரால் கைப்பற்றப்பட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி பதுக்கல்காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) இது தொடர்பாக, 1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை விற்பனையாளர் (உரிமம் வழங்கல்) ஆணை பிரிவு 3 (1)-ன் படியும், 1955-ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம், பிரிவு 7 (I)எ (II)-ன் படியும் பாலக்கரை காவல் நிலைய குற்ற எண் 821/80, 822/80 என்ற இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளன. 1955-ஆம் ஆண்டின் இன்றியமையாப் பொருட்கள் சட்டம் பிரிவு 6 (ஏ) யின் படி குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு விரிவான ஓர் அறிக்கையும், உணவு குற்றப் புலனாய்வு காவல் துறையினரால் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். பதுக்கல்காரர்கள் அதிகமான அளவிலே காசு கொடுத்து விட்டு வழக்கிலிருந்து விடுதலையாகி விடுகிறார்கள். அப்படிப்பட்ட பதுக்கல்காரர்களைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து அவர்களுடைய சொத்துக்களையும் ஜப்தி செய்வதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா ? மேலும் நன்றாகப் பிரம்படி கொடுத்து கடுமையான அளவுக்கு அவர்களுக்குத் தண்டனை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே குற்றப்புலனாய்வுத் துறையினர் இது குறித்து விரிவான அறிக்கையை அனுப்பி இருக்கிறார்கள். அவைகளை எல்லாம் ஆராய்ந்து சட்டத்துறையில் எப்படி எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அப்படி அப்படி நடவடிக்கை எடுப்பார்கள். ஆகவே

தண்டனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கேயே அளித்துவிடுவது என்பது சரியாக இருக்காது. அந்த வழக்குகள் குறித்து விசாரித்து இருக்கின்ற சட்டங்களைப் பயன்படுத்தி எந்த அளவுக்கு அவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுக்க இயலுமாகையால் இதற்கு தேசிய பாது காப்புச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக் காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, பிஸ்கட் கம்பெனிக்காரர்கள் மிக அதிகமான அளவுக்கு சீனியை அரசாங் கத்திடமிருந்து வாங்கிக்கொண்டு அதில் ஒரு குறிப்பிட்ட அளவை மட்டும் தங்களது உற்பத்திக்குப் பயன்படுத்திக்கொண்டு மீதியை கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட பதுக்கல்காரர்களைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகி றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர் களே, எல்லா வியாபாரிகளும் இந்தமாதிரி செயல்படுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. சில வியாபாரிகள்தான் இப்படிப் பட்ட குற்றமான செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள் அதற் காகத்தான் தனியாக குற்றப்புலனாய்வுத்துறை இருக்கின்றது. அத்துறையினர் ஆங்காங்கே இது குறித்து ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள். அத்துறையின் மூலமாக இக்குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. ஆனால் பொதுமக்களும் இப்படிப்பட்ட குற்றங்கள் நடப்பது குறித்து தகவல் தந்தால் குற்றப் புலனாய்வுத் துறையினரால் அது குறித்து மேற்கொண்டு விசாரித்து இப்படிப்பட்ட குற்றங்கள் நிகழாவண ணம் பார்த்துக்கொள்ளும் முயற்சியில் இந்த அரசும் ஈடுபட இயலும்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, திருச்சி தஞ்சை ரோட்டிலுள்ள கடையில் பதுக்கி வைக்கப்பட்டதாக சொல்லப் பட்ட சர்க்கரை கைப்பற்றப் பெற்றதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுமார் 1½ இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சர்க்கரை என்று சொன்னால் 50 மூட்டைக்கு இருக்கும் என்று கருதுகிறேன். இந்த சர்க்கரை அரசு கோடவுனிலிருந்து அந்த கடைக்கு வந்ததா? அல்லது சர்க்கரை ஆலைகளிலிருந்து அந்தக் கடைக்குவந்ததா என்ற விவரம் அமைச்சரிடத்தில் இருந் தால் அறிவிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து குற்றப்புலனாய்வுத் துறை திடீரென்று சென்று பரிசோதனை செய்ததில் 7-6-1980 அன்று 300 சர்க்கரை மூட்டைகள் பெறப்பட்டு கடனுக்கு விற்பனை

செய்யப்பட்டதாகக் காட்டப்பெற்றிருக்கிறது. ஆனால் அப்படி பெறப்பெற்றதற்கோ விற்பனை செய்யப்பெற்றதற்கோ தேவையான ரசீதுகள் அவர்களிடத்திலே இல்லை. அது மட்டும் அல்லாமல் 13–5–80 அன்று 13 மூட்டைச் சர்க்கரை கடனாக விற்கப்பட்டிருப்பதாக கணக்கில் காட்டப்பெற்றிருக்கிறது. அதற்கும் ரசீது எதுவும் காண்பிக்கப்பெறவில்லை இவற்றை அடிப்படையாக வைத்துத்தான் இந்த வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சர்க்கரை என்று சொல்கிறீர்களே அதை எப்படிப் பாதுகாத்து வைத்திருக்கிறீர்கள்? அந்த வியாபாரியின் பெயர் என்ன? அவர் கைது செய்யப்பட்டிருக்கிறாரா? அப்படி கைப்பெற்றப்பெற்ற சர்க்கரையை எப்படி வினியோகம் செய்யவிருக்கிறீர்கள் என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மொத்த சர்க்கரை வியாபாரியின் பெயர் முத்துசாமி, அவர் கைது செய்யப்பெற்றிருக்கிறார். கைப்பெற்றப்பெற்ற சர்க்கரை அரசாங்கத்தினுடைய பாதுகாப்பில் இருக்கிறது. அது கோர்ட்டினுடைய முடிவுக்குப் பிறகுதான், அதை எப்படி வினியோகிப்பது என்பது குறித்து முடிவு எடுக்கப்பெறும்.

திருவொற்றியூரில் சமையல் எண்ணெய் பதுக்கல்.

வினா எண். 224—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையை அடுத்த திருவொற்றியூர் காலடிப் பேட்டையிலுள்ள ஒரு கிடங்கில் பதினாறு இலட்சத்துக்கு மேற்பட்ட சமையல் எண்ணெய் சட்ட விரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்தது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :